இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
சட்டக்கற்கைகள் திணைக்களம்
சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் - மட்டம் 4
தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை 1 – 2022/2023
LLU4805/ LWU2311 ஒப்பந்த சட்டம்
நேரம்- 1 மணித்தியாலம்

திகதி - 27 செப்டம்பர் 2023 நேரம்- 9.30 a.m – 10.30 a.m

ஒரு (01) வினாவுக்கு மட்டும் விடை எழுதவும்.

தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. அ. அனுராதா என்பவள் தன்னிடமிருந்த பழைய குளிரூட்டியை விற்பனை செய்ய தீர்மானித்திருந்தாள். அவளின் நெருங்கிய நண்பியான யுவனி என்பவள் ஏலவே பாவனை செய்த குளிரூட்டி ஒன்றை கொள்வனவு செய்வதற்கு தேடிக்கொண்டிருந்தமையால், அனுராதா யுவனிக்கு மின்னஞ்சல் ஒன்றை குளிரூட்டியை 90,000/= ரூபாவிற்கு கொடைமுனைவு செய்வதாக குறிப்பிட்டிருந்தாள். யுவனி தான் அந்த குளிரூட்டியை 80,000/= ரூபாவிற்கு கொள்வனவு செய்ய விரும்புவதாக பதிலனுப்பியிருந்தாள். அனுராதா 80,000/= ரூபாவிற்கு விற்பனை செய்ய முடியாதென்று பதிலளித்தாள். பின்னர் யுவனி குறித்த குளிரூட்டியின் பெறுமதி 90000 ரூபா என்பதை உணர்ந்து கொண்டு அதனைக் கொள்வனவு செய்வதற்கு உடன்படுவதாக மின்னஞ்சல் செய்தாள். இருப்பினும் அனுராதா அக்குளிரூட்டியை தசுனி என்பவளுக்கு ஏற்கனவே விற்பனை செய்துவிட்டாள்.

   மேலே தரப்பட்ட சூழ்நிலையின் சட்டரீதியான விளைவுகளைப் பற்றி ஆராய்க. உமது விடை பொருத்தமான சட்ட வழக்குகளால் சான்றுபடுத்தப்பட்டிருக்க வேண்டும்.

   (10 புள்ளிகள்)

   ஆ. தபால் மூல ஏற்பு மற்றும் உடனடி தொடர்பாடல் மூல ஏற்பு ஆகிய இரண்டுக்குமான வேறுபாடுகளை விளக்கவும். உமது விடையை பொருத்தமான சட்ட வழக்குகளை சான்றாக எடுத்துக்காட்டவும்.

   (10 புள்ளிகள்)

2. அ. அமல், மேனகா மற்றும் சாமா ஆகியோர் தமது தந்தையின் பரம்பரை வழியாக ஒரு வீட்டை உடமைக் கொண்டனர். பின்னர் அமல் தனது மனைவி சனாயாவுடன் குறித்த வீட்டில் வசித்து வந்ததுடன் சனாயா வீட்டில் பல திருத்தவேலைகளையும் மேற்கொண்டாள். இத்திருத்தங்களால் வீட்டின் மதிப்பு சற்று உயர்ந்தது. இதனால் அமல், மேனகா மற்றும் சாமா ஆகியோர் சனாயா மேற்கொண்ட திருத்தங்களுக்கான செலவை

செலுத்த முடிவு செய்து, ஆவணம் ஒன்றை சரண்யாவுக்கு ஆக்கி குறிப்பிட்டிருந்ததாவது, "ஆதனத்திற்கு உம்மால் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் மற்றும் முன்னேற்றங்கள் என்பனவற்றைக் கருத்திற் கொண்டு குறித்த வீட்டை விற்கும் போது ரூபா 100, 000 இனை வழங்குவதற்கு நாம் உடன்படுகிறோம்". இருப்பினும் அவர்கள் குறித்த வீட்டை விற்பனை செய்தபோது அமல், மேனகா மற்றும் சாமா ஆகியோர் சனாயாவிற்கு குறித்த பணத்தை கொடுக்க மறுத்தனர்.

ஒப்பந்தச்சட்டத்தில் 'பிரதிபயன்' தொடர்பான உமது அறிவை பயன்படுத்தி சனாயா பணத்தை செலுத்துவதற்கான வாக்குறுதியை சட்டரீதியாக செயற்படுத்தக் கோர முடியுமா என ஆராய்க. உமது விடையை பொருத்தமான வழக்குகளின் மூலம் ஆதாரப்படுத்தவும்.

(10 புள்ளிகள்)

ஆ. Central London Property Trust Ltd *v.* High Trees House Ltd (1947) I KB 130 வழக்கில் பின்னல் விதியின் (Pinnel's Rule) கடுமைத்தன்மையை தணிப்பதற்கு முரண் தடக்கல் கோட்பாடு (Doctrine of Promissory Estoppel) ஆனது விருத்தி செய்யப்பட்டது.. மேற்குறித்த கருத்தோடு உடன்படுகிறீர்களா? உமது விடையை தீர்ப்புச்சட்டங்களை உபயோகித்து விளக்குக.

(10 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*